
## திராவிடத்தால் வாழ்கிறோம்

958

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

27

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# மனிதம் தழைக்க, மகத்தான முயற்சி!

இந்தியாவின் மருத்துவத் தலைநகரம் ‘தமிழ்நாடு’ என்று போற்றப்படுவது உண்டு. சுயமரியாதை இயக்கம் உருவான இந்த மண், ‘மனிதாபிமான தலைநகரம்’ என்றும், அழைக்க தகுதியுள்ள அளவுக்கு உடற்கொடை, உடல் உறுப்பு தானங்கள் மூலம் கவனம் ஈர்க்கத் தொடங்கியுள்ளது தமிழ்நாடு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டில் முதன்முதலாக ‘உடல் உறுப்பு தான இயக்கம்’ 2008-இல் தொடங்கப்பட்டது. அதன்பிறகு, 2000-க்கும் மேற்பட்டோரின் உடல் தானமாக பெறப்பட்டு, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட உடல் உறுப்புகள் தேவைப்படுவோருக்கு பொருத்தப்பட்டுள்ளன.

தன் உடலையே தானம் செய்யும் உயர்ந்த உள்ளங்களை கவுரவிக்கும் விதமாக, தானம் செய்வோரின் உடல்கள், இனி அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்ற அறிவிப்பை, 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் தேதி, தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அறிவித்தார். அதன்பிறகு, 2024-இல் ஓர் ஆண்டில் மட்டும் 268 உடல்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இது இந்தியாவிலேயே அதிகம் என்பது மட்டுமல்ல, 2008-இல் இருந்து ஓராண்டில் பெறப்பட்ட அதிகபட்ச உடல்களின் எண்ணிக்கையும் ஆகும். இதற்காக தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்துக்கு, ஒன்றிய அரசு விருது வழங்கி கவுரவித்தது. இன்று தமிழ்நாட்டைப் பார்த்து, கேரளா போன்ற பிற மாநிலங்களும், உறுப்பு தானம் செய்வோருக்கு அரசு மரியாதை வழங்க முடிவெடுத்துள்ளன.



உடல் உறுப்பு தானம் மற்ற சமூக சேவைகளில் இருந்து தனித்துவமானது. சாதியின் மீது கட்டமைக்கப்பட்ட இந்திய அடுக்குநிலை சமூகத்தில் தண்ணீர், தேநீருக்குக் கூட இரட்டைக்குவளை என்ற கொடூரம் தலைவிரித்தாடி இருக்கிறது. ஆனால், சாதி, மதம், மொழி தெரியாத ஒருவரின் இரத்தத்தையும், உடல் உறுப்பையும் பெற்றுக்கொள்ளச் செய்யும், தீண்டாமை ஒழிப்பின் அறிவியல் முறையாக உடல் உறுப்பு தானமும், இரத்த தானமும் திகழ்கின்றன. அத்தகைய மானுட சமத்துவ முயற்சியில் தமிழ்நாடு மைல்கல்லாக விளங்குகிறது என்றால், தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள சின்னஞ்சிறு கிராமம், 30 ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய முயற்சிகளைத் தொடங்கியிருக்கிறது என்றால் நம்ப முடியுமா? ஆம், தென்காசி மாவட்டத்தில் உள்ள ‘கீழப்பாவூர்’தான் அந்த கிராமம்.




கீழப்பாவூரில் 1990-களில், ‘குருதிக்கொடை இயக்கம்’ தொடங்கப்பட்டது. 1993-இல் ‘விழிக்கொடை இயக்கமும்’ அதனுடன் இணைந்தது. பின்னாளில் உடற்கொடையும் இவற்றோடு இணைந்தது. இதுவரை 400-க்கும் மேற்பட்டோர் குருதிக்கொடையும், சுமார் 150-க்கும் மேற்பட்டோர் விழிக்கொடையும், 6 பேர் உடற்கொடையும் செய்துள்ளனர். 50-க்கும் மேற்பட்டோர் உடற்கொடை தானம் செய்ய பதிவு செய்துள்ளனர். 50 ஆயிரம் பேருக்கு குறைவான மக்கள்தொகை கொண்ட ஒரு பேரூராட்சியில், இத்தனை எண்ணிக்கையில் குருதிக்கொடை, விழிக்கொடை, உடற்கொடை செய்த இன்னொரு கிராமத்தை இந்தியாவில் எங்கு தேடியும் கண்டிபிடிப்பது அரிதினும் அரிது.

கீழப்பாவூரின் இந்த மானுடம் போற்றும் மகத்தான முயற்சிக்கு அடிப்படைக் காரணம் தந்தை பெரியாரும் திராவிட இயக்கமும் தான். 50 ஆண்டுகளுக்கும் மேலாக வலுவான திராவிட இயக்கக் கோட்டையாக திகழும் கிராமம் கீழப்பாவூர். திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பகுத்தறிவாளர் கழகத் தொண்டர்களால் தொடங்கப்பட்டதே இந்த முயற்சி. திராவிட இயக்க லட்சியங்களைப் பரப்புவதுடன், அத்தியாவசிய மக்கள் சேவையிலும் ஈடுபட வேண்டுமென்ற நோக்கமே குருதிக்கொடை, விழிக்கொடை இயக்கம் தொடங்கக் காரணம்.

...பயணிப்போம்.

## ஐரோப்பிய பயணத்தில் அறிவுச் செல்வம்!

ஐரோப்பிய நாடுகளுக்கு முதலீடுகளைத் திரட்ட, பயணம் செய்திருந்த நமது முதலமைச்சர் அவர்கள், பயணம் மாபெரும் வெற்றியையும் மன நிறைவையும் தந்தது என தனது அனுபவத்தைப் பகிர்ந்திருந்தார்.

முதல்வர் அவர்கள் தனது பயணத்தில் சாதித்து வந்த மற்றொரு நிகழ்வு, ஜெர்மனியின் கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையால் வழங்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளைப் பெற்று வந்தது.

அந்தப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நூலகத்தை பார்வையிட்ட தலைவர் அவர்களிடம், நூலகத்தின் பொறுப்பில் உள்ள Dr.Sven Wortmann, Mr.Sharon Nathan, Mrs.Daria Lambrecht ஆகியோர் தமிழில் வரவேற்பளித்து, அங்கு ஓலைச்சுவடிகளைப் பராமரிப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்களை பகிர்ந்துகொண்டுள்ளனர். சிலவற்றைத் தமிழ்நாட்டில் பாதுகாக்குமாறும் வழங்கியுள்ளனர். அவற்றை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ஒப்படைத்துப் பாதுகாக்கும் எண்ணத்துடன் பெற்றுக் கொண்டதாக, முதலமைச்சர் அவர்கள் ‘உங்களில் ஒருவன்’ மடலில் எழுதி இருந்தார்.

அந்த ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்திட, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திடம் வழங்கி இருக்கிறார். தமிழ் அறிவு வளாகமாக உருவாகிவரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்துக்கு, தமிழ்நாடு அரசு நிலமும் கட்டுமானச் செலவில் ஒரு பகுதி நிதியும் வழங்கி இருக்கிறது. தற்போது, உலகின் பல பகுதிகளில் இருக்கும் தமிழ் அறிவுச் செல்வங்களையும் திரட்டித்தரும் பெரும் பணியினையும் முதல்வர் செய்துள்ளார் என அறிவுச் சமூகம் கொண்டாடி வருகிறது.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

77

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''




# இலங்கைத் தமிழர் குடியுரிமையை சிக்கலாக்கிய பா.ஜ.க.!

**தமிழ்நாட்டில் நீண்டகாலமாக வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க, மோடி அரசு முன்வந்திருப்பதாக பா.ஜ.க.வினர் பாராட்டு அறிக்கைகள் வெளியிடுகிறார்களே?**

பா.ஜ.க.வின் ஸ்டிக்கர் அரசியலில் இது புது வகை. அதுவும், பண்டமும் ரெடியாகவில்லை. பாத்திரத்திலும் நிரப்பப்படவில்லை என்ற நிலையில், மோடி படம் போட்ட ஸ்டிக்கரை அவசர அவசரமாக ஒட்டுகிறார்கள். பா.ஜ.க. அரசு கொண்டு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற அண்டை நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வந்த இந்து, பௌத்த, சமண, பார்சி, சீக்கிய, கிறிஸ்தவ மக்களுக்கு வழங்கப்பட்ட குடியுரிமை வாய்ப்பு, இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. தமிழர்களை முற்றிலுமாகப் புறக்கணித்தது, பா.ஜ.க. அரசு. தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா எம்.பி. நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தபோதும், பா.ஜ.க. அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா கொண்டு வந்த வெளிநாட்டினர் தொடர்பான 2025-ஆம் ஆண்டு சட்டத்திலும் இலங்கைத் தமிழர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. அவர்களை அகதிகளாகக்கூட கருதவில்லை. ஆவணங்கள் எதுவுமில்லாத சட்டவிரோத குடியேறிகள் என்றுதான் 2025-ஆம் ஆண்டு சட்டமும் சொன்னது. தமிழ்நாடு அரசின் மறுவாழ்வு முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியேயும் வசிக்கும் 90,000 இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியது பா.ஜ.க. அரசு.

இந்தக் கொடூரமான சட்டம் குறித்து, நாடாளுமன்றத்தில் உரக்கக் குரல் எழுப்பியவர் தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி.தான். மார்ச் 27-ஆம் தேதி அவர் பேசும்போது, “போர்ச்சூழலில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தப்பித்து வருபவர்களிடம் ஆவணங்கள் எப்படி இருக்கும்? 40 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிலேயே வாழ்பவர்களை, சட்டவிரோத குடியேறிகள் என்பதும், இந்த நாட்டில் பிறந்த அவர்களின் குழந்தைகளையும் சேர்த்து வெளியேற்ற நினைப்பதும் என்ன நியாயம்?” எனக் கேட்டு, இலங்கைத் தமிழர்களுக்கான குடியுரிமையை வலியுறுத்தினார். இதன் பிறகே, 2015 ஜனவரி 9 வரை, இந்தியாவில் பதிவு செய்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு பா.ஜ.க. அரசின் புதிய சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இதன் மூலம் சட்டவிரோதக் குடியேறிகள் என்ற நிலைமை மாறும் சூழல் உருவாகும் என்றாலும், இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை தொடர்பாக, புது சிக்கலை வலிந்து திணித்துள்ளது பா.ஜ.க. அரசு.

இங்குள்ள இலங்கைத் தமிழர்கள், சட்டவிரோத குடியேறிகளல்ல என்றாலும், அதனைப் பயன்படுத்தி நீண்டகால விசா பெறுவதற்கு, விண்ணப்பிக்க முடியாது என ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்துள்ளது. நீண்டகால விசா என்பது குடியுரிமை பெறுவதற்கான ஆவணங்களில் ஒன்றாக அமையும். அதற்கு விண்ணப்பிக்க முடியாது என்பது, இங்குள்ள இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் நடவடிக்கையாகும்..

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்



### பெயரும் நிதியும்... தலைவரின் டைமிங் நகைச்சுவையும்!



பெரிய. கோட்டீஸ்வரன்

2015-ஆம் ஆண்டு, சென்னை கோபாலபுரத்தில் தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்று, தேர்தல் நிதியாக 1,111 ரூபாய் அளித்தேன். கவரில் எழுதியிருந்த பெயரையும் தொகையையும் பார்த்த தலைவர் அவர்கள், டைமிங்காக “என்னய்யா பெரிய கோடீஸ்வரன் என்று பெயர் வைத்துக் கொண்டு, தொகை சிறியதாக இருக்கே” என நகைச்சுவையாக கூறினார். தலைவரின் அந்த உரையாடல் என்றைக்கும் என்னால் மறக்க முடியாதது.

**– பெரிய.கோட்டீஸ்வரன், தலைமைக் கழகப் பேச்சாளர், மாவட்ட பிரதிநிதி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வாழ்த்தும் – பாராட்டும்!

1956-ஆம் ஆண்டு, மே மாதம் 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்கள், திருச்சியில் மாநில மாநாடு நடைபெற்றது. மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றாக, அன்னிய ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற வியட்னாம், மலேயா, மொராக்கோ முதலிய நாடுகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தது. மேலும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் அன்னிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், உலகெங்கும் ஆதிக்கக்காரர்களின் இனவெறியைக் கண்டித்தும், மனித உரிமைகளுக்காக நடைபெறும் கிளர்ச்சிகளுக்கும் மாநாடு பாராட்டுதல்களைத் தெரிவித்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131